www.mntfreeias.com

# TNPSC – Group-I Preliminary Exams – 2010
## பொது அறிவு


வினாத்தாள் வரிசை **C** பதிவு எண் 

[அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி ] [மொத்த மதிப்பெண்கள் : 300]

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.**

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு 200 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும், எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. வினாத் தொகுப்பு **A** **B** **C** அல்லது **D** என நான்கு வரிசைகளில் அச்சிடப்பட்டுள்ளது. (இந்தப் பக்கத்தின் இடது மேல் மூலையில் உள்ள கட்டத்தைப் பார்க்கவும்) விண்ணப்பதாரர் வினாத்தாள் வரிசையை விடைத்தாளில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் குறித்துக் காண்பிக்க வேண்டும். உதாரணமாக ஒரு விண்ணப்பதாரர் **A** என்னும் வினாத் தொகுப்பு பெற்றிருந்தால் அவர் அதை தன்னுடைய விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் கீழே காண்பித்துள்ளவாறு நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும்.




5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
6. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர் மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்:– தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாகும்.

www.mntfreeias.com

www.mntfreeias.com

7. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் முதலியவற்றையும், விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் [ A ] [ B ] [ C ] மற்றும் [ D ] என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
9. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [ A ] [ B ] [ C ] மற்றும் [ D ] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியெனக் கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் [ B ] என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

[ A ] [redacted] [ C ] [ D ]

10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக் கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
12. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
13. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தான் முடிவானதாகும்.
14. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

www.mntfreeias.com

1. அவோகாட்ரோ எண் என்பது
A ) $6.00 X 10^{24}$
B) $6.023 X 10^{23}$
C) $6.054 X 10^{22}$
D) $6.504 X 10^{22}$

2. பாகுநிலை விசை என்பது கீழ்காணும் எந்த ஒன்றினுக்கு நேர் விகிதத்தில் உள்ளது ?
A ) வெப்பநிலை வாட்டம்
B) நிறை வாட்டம்
C) வேக வாட்டம்
D) மின்னூட்ட வாட்டம்

3. 2010–ம் ஆண்டு பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட தென் அமெரிக்க நாடு
A ) அர்ஜென்டைனா
B) சிலி
C) பிரேசில்
D) லிபியா

4. இந்திய பொருளாதார ஆய்வு அறிக்கை 92007–08)ன் படி, தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம்
A ) 16.2
B) 18.4
C) 15.3
D) 10.6

5. இராபர்ட் ஹூக், தாவர செல்களில் பார்த்த அமைப்பின் பெயர்
A ) புரோட்டோ பிளாசம்
B) செல் சுவர்
C) நியூக்ளியஸ்
D) ட்ரக்கீட்கள்

6. எத்தனை இணை கிரேனியல் நரம்புகள் ஷார்க் மீன் (Shark) வகையில் உள்ளது ?
A ) 8
B) 10
C) 12
D) 14

7. வகைப்படுத்துதல் என்பது இடம் அல்லது அமைவிடம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும் எனில், அது ................. வகைப்பாட்டியல் என அழைக்கப்படும்.
A ) எண்ணின் அடைப்படையிலான
B) பூகோள ரீதியான
C) பண்பின் அடிப்படையிலான
D) கால வரிசையான

8. $K_3 [Fe(CN)_6]$ என்ற அணைவுச் சேர்மத்தில் Fe–ன் ஆக்சிஜனேற்ற எள்
A ) +2
B) +3
C) +1
D) +4

9. ஒளிப்படத் தகட்டைப் பாதிக்காத கதிர்
A ) ஆல்ஃபா கதிர்
B) பீட்டா கதிர்
C) காமா கதிர்
D) இவற்றுள் எதுவுமில்லை

10 பின்வருபவர்களில் புத்தரின் குணாதிசயமும், போதனையும் அவரை ‘ஆசியாவின் ஒளிமட்டுமின்றி உலகின் ஒளியாக்குகிறது’ என்று கூறியவர் யார் ?
A ) சர் எட்வின் அர்னால்டு
B) திருமதி. ரைஸ் டேவிட்ஸ்
C) டாக்டர். இராதாகிருஷ்ணன்
D) எச்.ஜி.வெல்ஸ்

11. ...................., ...................... மற்றும் .................... முறையே சிஸ்டர்னே, தைலக்காய்டு மற்றும் கிரிஸ்டே காணப்படுகின்றன.

A ) மைட்டோகாண்ட்ரியா, ரைபோ சோம்கள், பசுங்கணிகம்
B) கால்கி உடலம், பசுங்கணிகம், மைட்டோ காண்ட்ரியா
C) ரைபோசோம்கள், பசுங்கணிகம், மைட்டோகாண்ட்ரியா
D) குரோமோசோம்கள், தைலக்காண்டு, மைட்டோகாண்ட்ரியா

12. பின்வருவனவற்றுள் எது இயற்கை இரப்பர் ?

A ) பாலியெஸ்டர்
B) பாலிஅமைடு
C) பாலிஐசோப்ரின்
D) பாலிசாக்ரைடு

13. IAA வின் அமெரிக்கர் அல்லாத முதல் இந்திய தலைவர் யார் ?

A ) மாதவன் நாயர்
B) டோனி
C) ரவி சாஸ்திரி
D) கவில் சிப்பல்

14. இந்திய தேசிய காங்கிரஸ் எனப் பெயரிட்டவர் யார் ?

A ) ரானடே
B) தாதாபாய் நௌரோஜி
C) W.C. பானர்ஜி
D) கோபா கிருஷ்ண கோகலே

15 மிக நன்று, நன்று, நியாயமான மற்றும் அற்பமான என்று வார்த்தை வழி தொடர் அளவை செய்யப்படும் தரவு

A ) வகைப்படுத்தப்படா தரவு
B) விகித தரவு
C) இடைவெளி தரவு
D) வரிசைக்கிரமம் செய்யத்தக்க தரவு

16. புதிய விவசாய தொழில் நுட்பம் பற்றிய பொருத்தமான விளக்கம் எது ?

A ) நிலம் அதிகப்படுத்துதல்
B) உழைப்பு அதிகரிக்கப்படுதல்
C) உழைப்பு ஒதுக்கப்படுதல்
D) நிலமும் உழைப்பும் அதிகப்படுத்துதல்

17. 9 pf மின் தேக்கிகள் மூன்று தொடர் இணைப்பில் இணைக்கப்பட்டு 120 V ஆற்றல் மூலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மின்தேக்கிகளுக்குமிடையேயான மின்னழுத்த வேறுபாடு

A ) 20 V
B) 40 V
C) 60 V
D) 90 V

18. A என்பவர் ஒரு வேலைப்பகுதியை 80 நாட்களில் செய்ய முடியும். அவர் 20 நாட்கள் மாத்திரம் வேலை செய்தார். B என்பவர் மீதியுள்ள வேலையை 36 நாட்களில் செய்து முடித்தார். A யும் B யும் சேர்ந்து எவ்வளவு நாட்களில் அவ்வேலையைச் செய்திருக்க முடியும் ?

A ) 25 நாட்கள்
B) 30 நாட்கள்
C) 35 நாட்கள்
D) 40 நாட்கள்

19. 25 முடிவுகளின் சராசரி 18, முதல் பன்னிரண்டு முடிவுகளின் சராசரி 14 மற்றும் இறுதி பன்னிரண்டு முடிவுகளின் சராசரி 17. அப்படியானால் பதின்மூன்றாவது முடிவு என்ன ?

A ) 87 B) 78

C) 67 D) இவற்றுள் எதுவுமில்லை

20 ஒரு பெண் தன்னுடைய வீட்டிலிருந்து நடக்கத் தொடங்கினாள். முதலில் கிழக்கு பக்கமாக 3 கி.மீ. தூரமும், பிறகு வடக்கு திசையில் திரும்பி 4 கி.மீ. அந்த திசையில் நடக்கிறாள். அவள் தற்போது வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கிறாள் ?

A ) 3 கி.மீ. தெற்கு B) 3 கி.மீ. வடக்கு

C) 5 கி.மீ. மேற்கு D) 5 கி.மீ. வட கிழக்கு

21. கரும்பு சக்கை கூழை ஈஸ்டினால் நொதிகளுக்குட்படுத்தும் போது கிடைக்கும் இறுதி விளைபொருள்:

A ) பைருவேட் B) பீனால்

C) லேக்டிக் அமிலம் D) ஈதைல் ஆல்கஹால்

22. ............... ஆண்டை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மனித உரிமைகளுக்கான ஆண்டாகக் கொண்டாடியது.

A ) 1964 B) 1966

C) 1968 D) இவற்றுள் எதுவுமில்லை

23. இலங்கையில் சமீபத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவர் யார் ?

A ) சிரிமாவோ பண்டாரநாயகே B) மஹிந்தா ராஜபக்சே

C) குமாரதுங்கே D) திஸ்ஸநாயகே

24. சேசாரத்தில் உள்ள மசூதி யாரால் கட்டப்பட்டது ?

A ) ஹிமாயூன் B) ஷேர்ஷா

C) அக்பர் D) பாபர்

25 நர்மதா பச்சோவா அன்டோலனில் மிகவும் பிரபலமான தலைவர்

A ) சுனில் அகர்வால் B) ராஜேஸ் கன்னா

C) மேதா பட்கர் D) கே. சி. செரியன்

26. “ஸ்பீஷிஸ் பிளான்டேரம்” என்ற நூலை எழுதியவர்

A ) ஹட்சின்சன் B) கரோலஸ் லின்னேயஸ்

C) எங்ளர் மற்றும் பிரான்டல் D) பெந்தம் மற்றும் ஹூக்கர்

27. முதுகெலும்பிலுள்ள சிறுநீர் மஞ்சள் நிறமாக இருக்கக் காரணம்

A ) யூரோகுரோம் B) மெலானின்

C) யூரிக் அமிலம் D) கொழுப்புப் பொருள்

28 பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு ?
A ) 2005 – 2010
B) 2002 – 2007
C) 2007 – 2012
D) 2006 – 2011

29. தெற்க ஆசிய நாடுகளில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள நாடு எது ?
A ) இந்தியா
B) பாகிஸ்தான்
C) நேபாள்
D) ஸ்ரீலங்கா

30. அசோக மன்னர் அரசின் ஆதரவைப் பெற்ற மதம்
A ) ஜைன மதம்
B) சைவம்
C) புத்த மதம்
D) வைணவம்

31. தேசிய வருமானத்தை விஞ்ஞான முறைப்படி கணக்கெடுப்பு செய்தவர் யார் ?
A ) பேராசிரியர் மஹலனாவிஸ்
B) டாக்டர் கே. என். ராஜ்
C) வி.கே.ஆர்.வீ. ராவ்
D) டாக்டர். வக்கீல்

32. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி
கூற்று (A): கடல்மட்ட வெப்பநிலையானது வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

கூற்று (R): வெப்ப நீரோட்டங்கள் வெப்பநிலையினை அதிகரிக்கவும், அதேபோல் குளிர் நீரோட்டங்கள் வெப்பநிலையினை குறைக்கவும் செய்கின்றது
A ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
C) (A) சரி ஆனால் (R) தவறு
D) (A) தவறு ஆனால் (R) சரி

33. குதிரை குளம்பு போன்ற அல்லது வட்ட வடிவம் கொண்ட முருகைப் பாரின் பெயர் ?
A ) கங்கண வடிவ பார்கள்
B) கரை விலகிய பார்கள்
C) கரையோரப் பார்கள்
D) இவற்றுள் எதுவுமில்லை

34. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) குளுக்கோஸ் | 1) உயிர்பலபடிகள் |
| b) சீரம் பரிசோதனை | 2) ஒடுக்கும் சர்க்கரை |
| c) மின்முனைக்கவர்ச்சி | 3) பிரித்தெடுத்தல் முறை |
| d) நியூக்கிளிக் அமிலம் | 4) HIV சோதனை |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

35. RTI சட்டப்படி லோக்சபாவின் முக்கிய அதிகாரி ?
A ) தலைவர் B) பிரதமர்
C) தலைமைச் செயலர் D) சபாநாயகர்

36. 'நல்ல இந்தியா நல்ல உலகம்' ('A Better India A Better World') என்ற புத்தகத்தை எழுதியவர்
A ) N.R. நாராயணமூர்த்தி B) இந்திரா சின்கா
C) ராஜீவ் சிக்ரி D) ஜஸ்வந்த் சிங்

37. 10 சுற்றுகள் 16 செ.மீ. விட்டம் கொண்ட டேன்ஜெண்ட் கால்வானா மீட்டர் வழியே ஆம்பியர் மின்னோட்டம் செலுத்தும் பொழுது, அதன் மையத்தில் விலையும் புலச்செறிவை கணக்கிடுக.
A ) 2.5 ஆம்பியர் சுற்று–மீ$^{-1}$ B) 25 ஆம்பியர் சுற்று–மீ$^{-1}$
C) 100 ஆம்பியர் சுற்று–மீ$^{-1}$ D) 250 ஆம்பியர் சுற்று–மீ$^{-1}$

38 இவற்றில் எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது ?
A ) மைக்ரோஸ்போராஞ்சியல் சோரஸ் –– மகரந்தப்பை B) மைக்ரோஸ்போர் –– மகரந்தத்துகள்
C) மெகாஸ்போரிலை –– சூல் D) மைக்ரோஸ்போரிலை – மகரந்தத்தூள்

39. வீராணத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டுவர வீராணம் திட்டத்தை துவக்கிய முதல்வர்
A ) மு. கருணாநிதி B) எம்.ஜி. ராமச்சந்திரன்
C) ஜெயலலிதா D) ஓ. பன்னீர் செல்வம்

40. இந்திய தபால் தந்தித்துறை வ.உ. சிதம்பரம்பிள்ளையின் நினைவாக தபால் தலை வெளியிட்ட ஆண்டு
A ) 1971 B) 1972
C) 1973 D) 1974

41. 2009–ல் வேதியியல் நோபல் பரிசு பெற்ற வெங்கட்ராமம் ராதாகிருஷ்ணனின்

ஆராய்ச்சியானது ...................... பற்றியது
A ) கிப்சாகுரோம் B) ரைபோசோம்
C) குரோமேட்டோகிராம் D) ஆக்சாகுரோம்

42. வேக ஈனு சோதனை அணு உலை இருக்குமிடம்
A ) டிராம்பே B) கைகா
C) கூடங்குளம் D) கல்பாக்கம்

43. 12 வது நிதிக்குழுவின் தலைவர் யார் ?
A ) C. ரங்கராஜன் B) K.C. பண்ட்
C) கேல்கர் D) மாதவன் ரவிந்ரா

44. பின்வரும் அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களில் இந்திய அரசியலமைப்பு முகவுரையில் 'சமய சார்பற்ற' என்ற வார்த்தையைச் செருக வைத்தது எது ?
A ) 1976 ஆம் ஆண்டு 41 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்
B) 1976 ஆம் ஆண்டு 42 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்
C) 1977 ஆம் ஆண்டு 43 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்
D) 1979 ஆம் ஆண்டு 44 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்

45 மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்களை நியமிப்பவர்
A ) ஆளுநர் B) முதலமைச்சர்
C) உள்துறை அமைச்சர் D) இவற்றுள் எவருமில்லை

46. தமிழ்நாட்காட்டி பின்வருவனவற்றில் எந்த ஒன்றின் அசைவுகளை வைத்து கணிக்கப்படுகிறது ?
A ) சந்திரன் B) சனி
C) சூரியன் D) வியாழன்

47. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) நீதிக்கட்சி | 1) பெரியார் ஈ.வே.ரா. |
| b) திராவிடர் கழகம் | 2) சிங்காரவேலு செட்டியார் |
| c) திராவிட முன்னேற்றக் கழகம் | 3) T.M. நாயர் |
| d) பொதுவுடைமைக் கட்சி | 4) சி.என். அண்ணாதுரை |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 4 | 1 | 3 | 2 |

C) 3 1 4 2

D) 2 1 3 4

48. தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்ட இடம்
A ) உறையூர் B) காஞ்சி
C) மதுரை D) வஞ்சி

49 தாஷ்கண்ட் ஒப்பந்தம் கையெழுத்திட்ட போது இந்தியப் பிரதமராக இருந்தவர் யார் ?
A ) ஜவஹர்லார் நேரு B) லால் பகதூர் சாஸ்திரி
C) இந்திரா காந்தி D) ராஜீவ் காந்தி

50 அரசியல் அமைப்பு நிர்ணய சபை தன்னுடைய அரசியல் அமைப்பு பணி நிறைவு செய்த நாள்
A ) 16 மே, 1946 B) 9 டிசம்பர், 1948
C) 26 நவம்பர், 1949 D) 26 ஜனவரி, 1950

51. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி
கூற்று (A): இரத்தத்தில் சிவப்பணுக்கள் உள்ளன அவை ஆக்ஸிஜனை எடுத்துச் செல்கிறது.
கூற்று (R): ஹீமோகுளோபின் நிறமி ஆக்ஸிஜன் எடுத்துச் செல்ல உதவுகிறது.
A ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
C) (A) சரி ஆனால் (R) தவறு D) (A) தவறு ஆனால் (R) சரி

52. நிலம் ஒரு
A ) மனிதனால் உருவாக்கப்பட்ட வளம் B) புதுப்பிக்க இயலாத இயற்கை வளம்
C) புதுப்பிக்க இயலும் வளம் D) இவை அனைத்தும்

53 கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க:
I. கொழுப்பு ஒரு உரம்
II. புரோட்டின் இயற்கையில் ஒரு ஈரியல்பு வகை
III. திமிங்கிலத்தின் மயோகுளோபினில் டை–சல்பைடு இணைப்பு உள்ளது.
IV. அண்டத்தின் எண்ட்ரோபி அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.
A ) II மட்டும் சரியானது B) II மற்றும் IV சரியானது
C) III IV மற்றும் II சரியானது D) அனைத்தும் சரியானவை

54. எமரால்டு அணை அமைந்துள்ள இடம்
A ) கோயமுத்தூர் B) ஊட்டி

C) ஈரோடு D) சேலம்

55. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பதினோறாவது அட்டவணை பின்வருவனவற்றுள் எதைப் பற்றிக் குறிப்பிடுகிறது ?
A ) முதலமைச்சரின் செயல்கள் குறித்து
B) பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்கள் குறித்து
C) மாவட்ட ஆட்சியர் கடமைகள் குறித்து
D) நாடாளுமன்றத்தின் செயல்கள் குறித்து

56. மரபணு நுகர்ச்சிக்கு காரணமாக செயல்படுகிறது என்ற ஆராய்சிக்காக நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் யார் ?
A ) வெர்னர் ஆர்பர் மற்றும் டேனியல் நாதன்ஸ்
B) நீல்ஸ் ஜெர்னி மற்றும் ஜியார்ஜஸ் கோஃளர்
C) ரிச்சர்ட் ஆக்ஸஸ் மற்றும் லிண்டா பக்
D) கொண்ராட் பிளாச் மற்றும் பெயோர்டர் லைனன்.

57. அப்சோனின்–ஐ கண்டுபிடித்தவர்
A ) ஜீயுல்ஸ் பார்டட்
B) கிறிஸ்டியன் கிராம்
C) அல்ம்ராத் ரைட்
D) லூயிஸ் பாஸ்டர்

58. 2005–ஆம் ஆண்டு தாதா சாகிப் பால்கே விருது பெற்றவர்
A ) தேவ் ஆனந்த்
B) மிர்னால் சென்
C) லதா மங்கேஷ்கர்
D) ஷியாம் பெனகல்

59. 10 மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்பனையான மிகச்சிறந்த புத்தகம் என்ற வரிசையில் முனைவர் கென்னத் பிளான் சர்டு (மேலாண்மை குரு) என்பவரால் எழுதப்பட்ட புத்தகம் எது ?
A ) யு கேன் வின்
B) மேக்சிமம் பவர்
C) ஒரு நிமிட மேலாளர்
D) 10 நிமிட மேலாண்மை படிப்பு

60. ராஜீவ் காந்தி உதயமி மித்ரா யோஜ்னா திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ?
A ) 2006
B) 2007
C) 2008
D) 2009

61 ஹீலியோசென்டிரிக் தத்துவத்டிதின்படி சூரியன் மத்தியல் நிலையாக உள்ளபோது மற்ற கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இந்த தத்துவத்தை முதன் முதலில் கூறியவர்
A ) கலிலியோ
B) நியூட்டன்
C) டாலமி
D) கோப்பர்நிக்கஸ்

62. இந்தியாவில் 2001–ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி மக்கள்தொகை வளர்ச்சி
A ) 3 %
B) 2.5 %
C) 1.9 %
D) 1.5 %

63. பின்வருவனவற்றுள் குன்றுகளின் சரியான வரிசை எது ? (வடக்கிலிருந்து தெற்காக)
A ) நல்ல மலை, நீலகிரி, ஜவாதி, ஆனைமலை
B) ஆனைமலை, ஜவாதி, நீலகிரி, நல்லமலை
C) நல்ல மலை, ஜவாதி, நீலகிரி, ஆனைமலை
D) ஆனைமலை, நீலகிரி, ஜவாதி, நல்லமலை

64. அண்ணாமலை நகரில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது எப்போது ?
A ) 1909
B) 1919
C) 1929
D) 1949

65. ஒன்று சேர்க்கப்பட்ட இரண்டு வில்லைகளின் குவியத் தூரம் வருமாறு
A ) $F = f_1 - f_2$
B) $F = f_1 f_2$
C) $F = f_1 + f_2$
D) $1/F = 1/f_1 + 1/ f_2$

66. கீழ்க்கண்டவற்றுள் எந்த கூற்று சரியானது ?
A ) இந்திய அரசியலமைப்பின் எந்த ஒரு பகுதியையும் நாடாளு மன்றத்தால் திருத்தம் செய்ய முடியும்
B) இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளைத் திருத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்க இல்லை
C) அரசு நெறிக்கொள்கையை நாடாளுமன்றத்தினால் திருத்த இயலாது
D) இந்திய அரசியலமைப்பிலுள்ள கூட்டாட்சிக் கொள்கைகளை நாடாளுமன்றத்தால் திருத்த இயலாது.

67. கீழ்க்கண்ட நாடுகளில் எந்த நாடு ஆசியான (ASEAN) அமைப்பை சாராத நாடு ?
A ) வியட்நாம்
B) புருனே
C) வங்காளதேசம்
D) மியான்மர்

68. நிலை விளைவு எதனால் ஏற்படுகிறது ?
A ) மொழிப்பெயர்த்தல்
B) தலைகீழ் மாற்றங்கள்
C) படியெடுத்தல்
D) நீக்கங்கள்

69. பிறந்த குழந்தைக்கு முத்தடுப்பு ஊசி போடுவதால் கீழ்க்கண்ட நோய்களிலிருந்து தடுப்பாற்றல் கிடைக்கிறது ?
A ) கக்குவான் இருமல், டெடானஸ், தட்டம்மை
B) கக்குவான் இருமல், டெட்டானஸ், டிப்தீரியா
C) டெட்டானஸ், டிப்தீரியா, தட்டம்மை, ரூபெல்லா
D) டெட்டானஸ், டிப்தீரியா, பெரியம்மை, ரூபெல்லா

70 சேர்க்கை சக பலபடிச் சேர்மத்திற்கு எடுத்துக்காட்டு
A ) புயூனோ – S
B) PVC
C) நியோபிரின்
D) கிளிப்டால்.

71 இயற்கை எரிவாயு என்பது அலிபோடிக் ஹைட்ரோ கார்பன்களின் கலவையாகும்.

இதில் உள்ள முக்கிய வாயு எது ?

A ) ஆக்ஸிஜன் ($O_2$)
B) நைட்ரஜன் ($N_2$)
C) மீத்தேன் ($CH_2$)
D) கார்பன்–டை–ஆக்ஸைடு ($CO_2$)

72 ஒரு இயங்கு சுருள் கால்வானா மீட்டர் அம்மீட்டராக மாற்ற அதனுடன்

A ) குறைந்த மின் தடையை இணைத்தடமாக அமைக்க வேண்டும்
B) உயர்ந்த மின்தடையை இணைத்தடமாக அமைக்க வேண்டும்
C) உயர்ந்த மின்தடையை தொடரிணைப்பில் அமைக்க வேண்டும்
D) குறைந்த மின்தடையை தொடரிணைப்பில் அமைக்க வேண்டும்

73. கீழ்கண்டவற்றுள் எது சரியாக பொருத்தப்பட்டுள்ளது ?

A ) சம உரிமை –– அடிப்படை கடமை
B) தகவலறியும் உரிமை –– வெளிப்படையான, பொறுப்புள்ள அரசாங்கம்
C) சமநீதியை உருவாக்குதல் –– அடிப்படை உரிமை
D) அரசியலமைப்பிற்கு அடிபணிதல் –– அரசு வழிகாட்டி நெறிமுறைக் கொள்கை

74. பயோடீசல் எந்த தாவரத்திலிருந்து பெறப்படுகிறது ?

A ) மாமரம்
B) மூங்கில்
C) ஜட்ரோப்பா
D) பைக்கஸ்

75. இந்திய அரசியலமைப்பில் அரசு நெறிமுறைக் கோட்பாடு ........................ ஷரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது ?

A ) 19–21
B) 14–16
C) 36–51
D) 24–28

76. ஏபியோலா வைரஸ் பரப்பும் நோய்

A ) பெரியம்மை
B) தட்டம்மை
C) சின்னம்மை
D) இன்புளுயன்சா

77. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி பயன்படுத்தும் கருவி

A ) ரிபோ வீதம் மற்றும் பண இருப்பு விகிதம் அதிகரித்தல்
B) ரிபோ வீதம் குறைத்தல் மற்றும் பண இருப்பு விகிதம் அதிகரித்தல்
C) ரிபோ வீதம் குறைத்தல் மற்றும் பண இருப்பு அளவு குறைத்தல்
D) வங்கிக்கு தரும் வட்டி வீதத்தைக் குறைத்தல்

78. கீழ்கண்ட கூற்றில் எந்த ஒன்று சரியானது ?

A ) குடியரசுத் தலைவர் நிதிக்குழுவை ஒவ்வொரு நான்கு ஆண்டுக்கும் நியமிக்கின்றார்
B) நிதிக்குழு ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் கொண்டதாகும்
C) 11–வது நிதிக்குழுவின் தலைவர் கே.சி.பந்த் ஆவார்.
D) நிதிக்குழுவின் அறிக்கை திட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்

79. தண்டிதுர்கா இந்த அரசை நிறுவினார்
A ) பாதாமியில் சாளுக்கிய அரசு
B) கல்யாணியில் சாளுக்கிய அரசு
C) வெங்கியில் சாளுக்கிய அரசு
D) இராஷ்டிரகூட வம்சம்

80. 1/1.2 – 1/2.3 + 1/3.4 – 1/4.5 + ......................
A ) 2 log 2 - 1
B) – 2 log 2 - 1
C) 2 log 2 + 1
D) – 2 (log 2 + 1)

81. ஒரு தாவரத்திற்கும் அதனை சூழ்ந்துள்ள சூழ்லைக்கும் உள்ள உறவினைப் பற்றி படிப்பது
A ) சின்ஈக்காலஜி
B) சுற்றுச்சூழல்
C) ஆட்டீக்காலஜி
D) உயிரியில் பல்வகைமை

82. ரவி மற்றும் ராஜாவின் வயது விகிதம் 5 : 12. 6 வருடங்களுக்குப் பிறகு அவர்களின் வயது விகிதம் 8 : 15 எனில் அவர்களுக்கிடையேயான வயது வித்தியாசம் எவ்வளவு ?
A ) 14 வருடங்கள்
B) 16 வருடங்கள்
C) 12 வருடங்கள்
D) 13 வருடங்கள்

83. ஒகேனக்கல் கூட்டு குடிநீர் பிரச்சனை எந்தெந்த மாநிலத்திற்கும் இடையேயுள்ள தகராறு ?
A ) தமிழ்நாட்டிற்கும், கேரளாவிற்கும் இடையே
B) தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கு மிடையே
C) தமிழ்நாட்டிற்கும், ஆந்திராவிற்கும் இடையே
D) கர்நாடகத்திற்கும், கேரளாவிற்கும் இடையே

84. தொழுநோய் உருவாகக் காரணமான உயிரினம்
A ) மைக்கோ பேக்டீரியம் லெப்ரே
B) மைக்கோ பேக்டீரியம் டியுபர்குளோசஸ்
C) கார்னிபேக்டீரியம் டிப்தீரியா
D) வேரிசெல்லா ஜோஸ்டர்

85. தமிழ்நாட்டின் முதல் பெண் முதலமைச்சர் யார் ?
A ) ஜானகி ராமச்சந்திரன்
B) ஜெயலலிதா
C) மம்தா பானர்ஜி
D) மாயாவதி

86. மருது சகோதரர்களோடு தொடர்புடையவைகளைத் தேர்வு செய்க:
**மருது சகோதரர்கள்:**
I. சிவகங்கை சீமையை ஆண்டார்கள்
II. சிறுவயல் மற்றும் காளையார் கோவில் அவர்களின் முக்கிய இடங்கள்
III. பாஞ்சாலங்குறிச்சியில் அடைக்கலம் புகுந்தனர்
IV. 1801 ல் ஆங்கிலேயர்களால் கொலை செய்யப்பட்டனர்
A ) I மட்டும் சரியானது
B) II மட்டும் சரியானது

C) I, II மற்றும் IV சரியானவை D) I, III மற்றும் IV சரியானவை

87. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் எந்த ஆண்டு தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டது ?
A ) 1980 B) 1990
C) 1970 D) 1960

88. மிகவும் பிரபலமான மலைவாழ் மக்கள் தாவரவியல் (எத்னோபாடனிஸ்ட்) –லின் இந்திய விஞ்ஞானியாக கருதப்படுபவர்
A ) வி.எம். மெஹர்–ஹோம்ஜி B) ஆர். பி. எஸ். கட்வால்
C) எஸ்.கே. ஜெயின் D) எஸ். எஸ். போஜ்வானி

89. டேனியல் செல்லில் நடைபெறும் வேதிவினையானது
A ) $Cu + Hg \rightarrow Cu.Hg$ B) $Zn^0 + Cu^2 \rightarrow Zn^{2+} + Cu^0$
C) $Cu^{2+}\ 2Ag \rightarrow Cu^0 + 2Ag^+$ D) $3Fe^{2+} + Ce^6 \rightarrow 3Fe^{3+} + Cr^{3+}$

90. சோனார் கருவி பெரும்பாலும் பயன்படுத்துபவர்கள்
A ) டாக்டர்கள் B) பொறியாளர்கள்
C) மாலுமிகள் D) விண்வெளி வீரர்கள்

91. புத்த மரபுப்படி ............................ என்னும் இடத்தில் புத்தர் இறந்த ஆண்டில் புத்த மாநாடு கூடியதாக அறிகிறோம்.
A ) வைசாலி B) பாடலிபுத்திரம்
C) சாரநாத் D) ராஜகிரிகா.

92. $x = \cos \theta$ என்பது $x^2 - 3x + 2 = 0$ ன் மூலம் ஆகும் எனில், $\theta$ என்பதன் சரியான மதிப்பு என்ன ?
A ) 1 B) 0
C) –1 D) $\pi$

93. இந்திய அரசியலமைப்பு விதி 263 எதைப் பற்றியது ?
A ) மத்திய பணியாளர் தேர்வு ஆணையம் B) இந்திய தேர்தல் ஆணையம்
C) மாநிலங்கிடையிலான குழுமம் D) நிதி ஆணையம்

94. எது சரியாக பொருந்தாது ?
A ) மத்திய கண்காணிப்பு ஆணையம் –– கிரிபாலணி குழு B) அனைத்து இந்திய பணிகளின் தந்தை –– சர்தார் வல்லபாய் பட்டேல்
C) கூட்டு சேரா இயக்கத்தின் பொது செயலாளர் –– டாக்டர். ராஜேந்திர பிரசாத் D) மத்திய பணியாளர் தேர்வாணையம் –– ஏ.எம். குஸ்ரு

95. நிலத்தின் அளவு மீதான வரியை பரிந்துரை செய்த குழு
A ) ஜான்மத்தாய் குழு
B) பூதலிங்கம் குழு
C) வான்சூ குழு
D) ராஜ் குழு

96. இந்திரா ஆவாஸ் திட்டத்தின் நோக்கம்
A ) கடன் உதவி அளித்தல்
B) இலவச வீட்டு வசதி கொடுத்தல்
C) போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்
D) இவற்றுள் எதுவுமில்லை

97. பொருளாதார சீர்திருத்தத்தை (தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) இந்தியாவில் 1991–ஆம் ஆண்டு முன்னாள் நிதியமைச்சர் ..................................அறிமுகப்படுத்தினார்.
A ) டாக்டர். மன்மோகன்சிங்
B) திரு. ப. சிதம்பரம்
C) திரு. பிரனாப் முகர்ஜி
D) திரு. பி.வி. நரசிம்மராவ்

98. இந்தியாவின் இறக்குமதியில் எந்த ஒரு தனிப்பொருள் மிக அதிகமாக உள்ளது ?
A ) மூலதனப் பொருட்கள்
B) உணவு மற்றும் உணவு சார்ந்த பொருட்கள்
C) பொன்
D) எண்ணெய் (எரிபொருள்)

99. மூன்று வட்டமேசை மாநாடுகளிலும் கலந்து கொண்ட தலைவர் ?
A ) மகாத்மா காந்தி
B) சுபாஷ் சந்திரபோஸ்
C) ஜவஹர்லால் நேரு
D) டாக்டர். B.R. அம்பேத்கார்

100. இந்தியாவில் எங்கு ஆசியாவின் மிக்பெரிய தொலைநோக்கி அமைக்கப்பட்டுள்ளது ?
A ) டார்ஜிலிங் –– மேற்கு வங்கம்
B) கொடைக்கானல் – தமிழ்நாடு
C) மகாபலீஸ்வர் –– மஹாராஷ்ட்ரா
D) காவலூர் –– தமிழ்நாடு

101 ஒரு உள்ளார்ந்த குறைக் கடத்தியின் $\ln \rho_1$ க்கும் 1/T க்கும் படம் வரைந்தால் அதன் வடிவம் ...................................... இருக்கும். ($\rho_1$ – மின்தடை எண், T – வெப்பநிலை
A ) நேர்க்கோடு
B) வட்டம்
C) பரவளையம்
D) நீள்வட்டம்

102 ‘ஒரு ஜீன் ஒரு நொதி’ என்ற கோட்பாட்டை முன் வைத்தவர்கள் ...................., அவர்கள் இவ்வாராய்ச்சிக்கு பயன்படுத்திய உயிரினம் .......................
A ) பீடில் மற்றும் டாட்டம், ஈகோலை
B) பீடில் மற்றும் டாட்டம், நியுரோஸ் போரா
C) ஜேகப் மற்றும் மோனாடு, நியுரோஸ்போரா
D) ஜேகப் மற்றும் மோனாடு, ஈகோலை

103. பருவமடைந்த ஆண்களுக்குரிய குணாதிசயங்களை உருவாக்கும் ஹார்மோன்
A ) ஆன்ட்ரோஜன்
B) பாலிக்கல் செடல் தூண்டும் ஹார்மோன்

(FSH)
C) அட்ரீனலின் D) டெஸ்ட்டோஸ்டீரான்

104 பின்வருவனவற்றுள் எது சரியாக பொருத்தப்பட்டுள்ளது ?
A ) TNT – உரம் B) கேசோலின் —— பெட்ரோகெமிக்கல்
C) பொட்டாசியம் சல்பேட் —— வெடிபொருள் D) சிமெண்ட் —— மூலக்கூறு படிகம்

105 கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி
கூற்று (A): அரசியலமைப்பு 32வது விதி அரசியலமைப்பு பரிகார உரிமை பற்றியது. இவ்வுரிமையின்றி அரசியலமைப்பு செல்லாதது (பயனற்றது)
கூற்று (R): அரசியலமைப்பு 32வது விதி, அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்த உச்சநீதி மன்றத்தை அணுகும் வழிமுறைகளை அடிப்படை உரிமையாக வழங்குகிறது.
A ) (A) மட்டும் சரி ஆனால் (R) தவறு B) (A) மட்டும் சரியானது
C) (R) மட்டும் சரியானது D) (A) மற்றும் (R) இரண்டுமே சரியானது, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.


106. தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ?
A ) 1935 B) 1937
C) 1947 D) 1952

107 தமிழ்நாடு கீழ்க்கண்ட தொழில் தொகப்புகளுக்கு பேர் போனது ?
A ) துணிகள் B) இரசாயனம்
C) நகைகள் மற்றும் கற்கள் D) கண்ணாடி

108. திறந்தவெளி பல்கலைக்கழகம் பட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு .................... நீதிபதிகளால் வழங்கப்பட்டது.
A ) நீதிபதிகள் எஸ்.பி. சின்ஹா மற்றும் முக்குந்ராம் சர்மா B) நீதிபதிகள் மோகன் மற்றும் கே.ஜி. பாலகிருஷ்ணன்
C) நீதிபதிகள் எஸ்.எச். கபாடியா மற்றும் அல்டாமர் கபீர் D) இவற்றுள் எவருமில்லை

109 சத்யார்த் பிரகாஷ் நூலை எழுதியவர்
A ) ராஜாராம் மோகன் ராய் B) தேவேந்திரநாத் தாகூர்
C) கேசவ் சந்திரசென் D) தயானந்த சரஸ்வதி

110 விடுபட்ட எண்ணை கண்டுபிடிக்கவும்




A ) 1000 B) 1001
C) 999 D) 1002

111. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க:
I. அக்பர் தீன் இலாஹியை அறிவித்தார்
II. தீன் இலாஹியை என்றால் தெய்வக் கடமை என்று பொருள்
III. தீன் இலாஹிக்கு மதம் மாறியவர்களில் முக்கியமானவர் ராஜா பீர்பால்
IV. தீன் இலாஹி இஸ்லாமிய சடங்குகளை ஊக்குவிக்கவில்லை
A ) I மட்டும் சரியானது B) I மற்றும் II சரியானவை
C) I, III மற்றும் IV சரியானவை D) அனைத்தும் சரியானவை

112. ஒரு செவ்வகத்தின் பரப்பளவு 16 சதுர மீட்டர், அதன் நீளம், அகலத்தை விட நான்கு மடங்கு எனில் செவ்வகத்தின் சுற்றளவு எவ்வளவு ?
A ) 20 மீ B) 18 மீ
C) 16 மீ D) 14 மீ

113. பின்வருவனவற்றுள் எது சரி ?
A ) தேவரடியார்கள் கோயிலில் திருவிழாவின் போது கடவுள் முன் நடனமாடுவார்கள்
B) தேவரடியார்கள் சபாக்களில் உதவியாளர்கள்
C) தேவரடியார்கள் ஓர் கிராமத்தின் தலைமைப் பாடகர்
D) தேவரடியார்கள் வண்ணம் தீட்டுபவர்கள்

114 ஒரு காட்டில் 3/10 பகுதி மரங்களை 50 நாட்களில் X வெட்டுகின்றான். 40% மரங்களை 40 நாட்களில் Y வெட்டுகின்றான் மற்றும் 1/2 மரங்களை 80 நாட்களில் Z வெட்டுகின்றான். எனில், யார் முதலில் வேலையை முடிப்பார் ?
A ) X B) Y

C) Z  D) X மற்றும் Z

115. நாட்டின் மொத்தப் போக்குவரத்தில் தரைவழிப் போக்குவரத்து
A ) 20%  B) 40%
C) 60%  D) 80%

116. பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம் (PMEGP) இந்தியாவில் கீழ்க்கண்ட திட்டங்கள் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது ?
A ) பாரதப் பிரதமர் வேலைவாய்ப்புத் திட்டம் (PMRY) மற்றும் கிராமிய வேலைவாய்ப்பு (REGP)
B) தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் (NREP) மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)
C) இந்திரா குடியிருப்புத் திட்டம் (IAY) மற்றும் கிராமிய ஒருங்கிணைந்த திட்டம் (IRDP)
D) சிறுவிவசாயி முன்னேற்ற திட்டம் மற்றும் (SFDA) குறுவிவசாயி முன்னேற்ற திட்டம் (MFAL)

117. கீழ்காண்பவற்றில் சரியான வரிசை எது ?
I. SLV–3 ஏவப்பட்டது
II. பங்களாதேஷ் உருவாக்கம்
III.சிக்கிம் இந்தியாவின் 22–வது மாநிலமாக உருவாக்கம்
IV. பொக்கரான் சோதனை
A ) II – IV – III – I  B) III – I – II – IV
C) II – I – III – IV  D) III – IV – II – I

118. தமிழ்நாட்டின் கல்வியறிவு கதவீதம், 2001ம் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி
A ) 80.65  B) 70.45
C) 60.75  D) 73.45

119 ஒரு காலி இடத்தின் நீளம் மற்றும் அகலம் 4 : 5 என்ற விகிதத்தில் உள்ளது. நீளம் அகலத்தைவிட 20 மீட்டர் குறைவு எனில், காலி இடத்தின் சுற்றளவு என்ன ?
A ) 180 மீ  B) 360 மீ
C) 80 மீ  D) 100 மீ

120 முதல் இந்திய பேரரசை நிறுவியவர்
A ) பிந்துசாரா  B) சந்திரகுப்த மௌரியர்
C) அசோகர்  D) பிருகத்ரதன்.

121. தமிழ்நாட்டில் ஜனநாயக முறையிலான தேர்தல் முறை கீழ்க்கண்டவற்றில் எதில் கிடைக்கிறது ?
A ) செப்பு பட்டயமாக  B) கல்வெட்டாக
C) ஓவியமாக  D) இலக்கியமாக

122. தொல்காப்பியத்தில் சொல்லப்படும் பலவித நடனங்கள்
I. வெறிக்கூத்து
II. கருக்கூத்து
III. வள்ளிக்கூத்து
IV. கலன்நிலைக்கூத்து
A ) அனைத்தும் சரியானவை
B) I மற்றும் IV சரியானவை
C) அனைத்தும் தவறானவை
D) I மற்றும் II சரியானவை

123. 2001–ம் ஆண்டின் தேசிய மனிதவள அறிக்கையின்படி தமிழ்நாடு பெற்றுள்ள இடம்
A ) ஏழாவது இடம்
B) மூன்றாவது இடம்
C) நான்காவது இடம்
D) ஒன்பதாவது இடம்

124. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு சென்னை மாகாணத்தில் அமைச்சரவையில் அமர்ந்த கட்சி
A ) சுயராஜ்ய கட்சி
B) நீதிக் கட்சி
C) காங்கிரஸ் கட்சி
D) கம்யூனிஸ்ட் கட்சி

125. கடந்த 2009 நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க கட்சி வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை:
A ) 25
B) 35
C) 40
D) 18

126. கொல்கத்தாவில் உள்ள போர்ட் வில்லியம் கல்லூரி துவங்கப்பட்ட ஆண்டு
A ) 1806
B) 1810
C) 1805
D) 1800

127. இந்தியாவில் மார்ச்சு 1, 2001 அன்று இருந்த மக்கள் தொகை
A ) 1.027 மில்லியன்
B) 1.007 மில்லியன்
C) 1.017 மில்லியன்
D) 1.037 மில்லியன்

128. தமிழ்நாட்டின் நகரங்களின் எண்ணிக்கை
A ) 832
B) 900
C) 750
D) 500

129 அசோகரின் கல்வெட்டுகளில் எந்த மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது ?
A ) ஹிந்தி
B) சமஸ்கிருதம்
C) பிராகிரதம்
D) தெலுங்கு

130. மதிப்புகளின் வரிசை இடத்தின் அடிப்படையிலான சராசரி

**A )** $\overline{X}$
B) இடைநிலை

C) முகடு D) திட்டவிலக்கம்

131. தற்போதைய தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் 2006 சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின் ............. முறையாக முதலமைச்சராக பதவியேற்றார்.

A ) ஆறாவது B) ஐந்தாவது

C) ஏழாவது D) நான்காவது

132. கொடுக்கப்பட்ட கூற்றுகளைக் கவனிக்கவும்:

I. C. இராஜகோபாலாச்சாரியார் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர்

II. C. இராஜகோபாலாச்சாரியார் ஒரு வழக்கறிஞர்

III. C. இராஜகோபாலாச்சாரியார் நீதிக்கட்சியை சார்ந்தவர்

IV. C. இராஜகோபாலாச்சாரியார் மட்டுமே ஒரே இந்தியர், இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்தவர்.

இவற்றில்

A ) I மட்டுமே சரியானது B) I மற்றும் II சரியானவை

C) I, II மற்றும் IV சரியானவை D) அனைத்தும் சரியானவை

133. தமிழக அரசுச் சின்னமாக விளங்குவது

A ) ஸ்ரீரங்கம் கோவில் கோபுரம் B) தஞ்சாவூர் பெரியகோவில் கோபுரம்

C) திருவில்லிபுத்தூர் கோவில் கோபுரம் D) சிதம்பரம் கோவில் கோபுரம்

134. முல்லை நிலம் என்பது

A ) காட்டுப் பகுதி B) மலைப்பகுதி

C) உழவு செய்யும் பகுதி D) கடலோர நிலம்

135 சித்தண்ண வாசலில் உள்ள ஜெயின் குகைக் கோயில் உள்ள மாவட்டம்

A ) திருநெல்வேலி B) தஞ்சாவூர்

C) மதுரை D) புதுக்கோட்டை

136. தமிழ்நாடு அரசு அமைத்த மத்திய–மாநில அரசு உறவுகளைப் பற்றிய குழுவிற்கு தலைமை வகித்தவர் யார் ?

A ) மண்டல் B) ராஜ்மன்னார்

C) சர்க்காரியா D) ஷா

137 கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி

கூற்று (A): நாடாளுமன்றத்தின் வரம்பிற்குள் குடிமைப் பணி உட்பட்டதல்ல

கூற்று (R): வெளியிடாமை என்ற தரத்தினால் இதன் மீது அதிகாரம் செலுத்தப்பட்டு வருகிறது.

A ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

www.mntfreeias.com

சரியான விளக்கம்

C) (A) சரி ஆனால் (R) தவறு

D) (A) தவறு ஆனால் (R) சரி

138.

$$A = \begin{vmatrix} 1 & i \\ -i & 1 \end{vmatrix} \text{ மற்றும் } B = \begin{vmatrix} i & -1 \\ -1 & -i \end{vmatrix}$$

A ) $\begin{vmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{vmatrix}$

B) $\begin{vmatrix} i & 0 \\ 0 & i \end{vmatrix}$

C) $\begin{vmatrix} 0 & 0 \\ 0 & 0 \end{vmatrix}$

D) $\begin{vmatrix} -i & 0 \\ 0 & 1 \end{vmatrix}$

139. $2^{32} + 1$ என்பது ஒரு முழு எண்ணால் முழுமையாக வகுபடும் எனில், கீழ்வரும் எண்களில் எதனை அது முழுமையாக வகுக்கும் ?

A ) $2^{16+1}$

B) $2^{16-1}$

C) $7 \times 2^{33}$

D) $2^{96+1}$

140. அபினவ் பிந்த்ரா, 2008 ஒலிம்பிக் போட்டிகள் பீஜிங்கில் நடைபெற்ற போது தங்கப்பதக்கம் பெற்றார், அவர் பங்கேற்ற விளையாட்டு ?

A ) கால்பந்து

B) ஹாக்கி

C) கிரிக்கெட் / மட்டைப்பந்து

D) துப்பாக்கிச் சுடும் போட்டி

141. ஒரு முக்கோணம் 1/2 : 1/3 : 1/4 என்ற விகிதத்தில் தன் பக்கங்களைக் கொண்டுள்ளது அந்த முக்கோணத்தின் சுற்றளவு 52 செ.மீ. எனில் அதன் மிகச்சிறிய பக்கத்தின் நீளம்

A ) 9 செ.மீ

B) 10 செ.மீ.

C) 11 செ.மீ.

D) 12 செ.மீ.

142. சங்ககால இசைக்கருவிகளை இவ்வாறு வகைப்படுத்தலாம்

I. தோற்கருவி

II. துளைக்கருவி

III. நரம்புக் கருவி

IV. கஞ்சாக்கருவி

இவற்றில்

A ) I மற்றும் III சரியானவை

B) I, III மற்றும் IV சரியானவை

C) அனைத்தும் சரியானவை

D) அனைத்தும் தவறானவை

www.mntfreeias.com

143. தமிழ்நாட்டின் மிக உயரமான சிகரம்
A ) ஆனைமுடி
B) தொட்டபெட்டா
C) சேர்வராயன் குன்றுகள்
D) கொடைக்கானல்

144. பெப்சினை சுரப்பது
A ) உமிழ்நீர்ச் சுரப்பி
B) இரைப்பை
C) முன் சிறுகுடல்
D) சிறுகுடல்

145. பின்வரும் எந்த உரத்தில் நைட்ரஜனின் சதவிகிதம் அதிக அளவில் உள்ளது ?
A ) NPK
B) யூரியா
C) அம்மோனியம் நைட்ரேட்
D) அம்மோனியம் பாஸ்பேட்

146. ஒளியானது ........................... படிகத்தின் வழியே செல்லும் பொழுது இரட்டை விலகல் ஏற்படுகிறது.
A ) கால்சைட்
B) சோடியம் குளோரைடு
C) வைரம்
D) ஸிங்க் சல்பைடு

147 பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) கர்நாடகா | 1) பாபுதான் குன்றுகள் |
| b) ஒரிசா | 2) மயூர்பன்ச் |
| c) சட்டீஸ்கர் | 3) பைலடிலா |
| d) ஜார்கண்ட் | 4) போனை தொடர் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 1 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

148. பொது உடைமை கொள்கை அறிவிக்கப்பட்ட திட்டம்
A ) முதல் ஐந்தாண்டு திட்டம்
B) வருடாந்திர திட்டங்கள்
C) இரண்டாவது திட்டம்
D) எட்டாவது திட்டம்

149. சர் முகமது இக்பால்

A ) புலவர் மற்றும் முஸ்லிம்களுக்கு தனிநாடு கொள்கையை உருவாக்கியவர்
B) சென்னை மாகாணத்தை சேர்ந்தவர்
C) முஸ்லீம் லீக் கட்சியை துவக்கியவர்
D) அலிகார் இயக்கத்தை நடத்தியவர்

150. மேலைக்கடல் என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்ட கடல்

A ) அட்லாண்டிக் பெருங்கடல்
B) பசுபிக் பெருங்கடல்
C) இந்தியப் பெருங்கடல்
D) ஆர்டிக் பெருங்கடல்

151. இந்தியாவில் எந்த பிராந்தியத்தில் நிலத்தடி நீர்வளம் உருவாக ஏதுவாக உள்ளது ?

A ) கோந்துவானா படிவப்பாறை பிராந்தியம்
B) தக்காணப் பீடபூமி பிராந்தியம்
C) கங்கை–பிரம்மபுத்திரா வண்டல் பிராந்தியம்
D) செனஸொயிக் படிவுப்பாறை பிராந்தியம்

152. எந்த ஒலிம்பிக் விளையாட்டி,ல இந்தியா இறுதியாக ஹாக்கியில் தங்க பதக்கத்தை வென்றது ?

A ) மான்ட்ரீல் (1976)
B) மாஸ்கோ (1980)
C) லாஸ் ஏஞ்சல்ஸ் (1984)
D) அட்லாண்டா (1996)

153. இந்தியாவில் இரும்புத்தாது படிவுகள் காணப்படுவது

A ) பைலடிலா
B) டும்கூர்
C) தார்வார்
D) பன்ஸ்வாரா

154. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின எந்த பிரிவு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், பற்றி பேசுகிறது ?

A ) பிரிவு 2
B) பிரிவு 235
C) பிரிவி 243
D) பிரிவு 38

155. யூகேரியோட்டிக் செல்லமைப்பு கொண்ட ஒற்றை செல் தாவரங்கள் மற்றும் விலங்குகள் இந்த உலகத்தில் அடங்கும் ?

A ) மொனிரா
B) பூஞ்சை
C) பிளாண்டே
D) புரோடிஸ்டா

156. அக்ரோசோம் எவற்றால் உருவானது ?

A ) மைட்ரோகாண்ட்ரியா
B) சென்ட்ரியோல்கள்
C) கால்கை நுண்ணுறுப்புகள்
D) ரைபோசோம்கள்

157. இவற்றுள் கால்வாய் பாசனத்தினை அதிகம் பயன்படுத்தும் மாநிலம் எது ?

A ) குஜராத்
B) ஒரிசா

C) உத்திரப்பிரதேசம் D) ஹரியானா

158. மிக அதிக கொள்திறன் (MW) கொண்ட அணுமின் நிலையம்
A ) கைகா, கர்நாடகா B) கோட்டா, ராஜஸ்தான்
C) கூடன்குளம், தமிழ்நாடு D) தாரப்பூர், மகாராஷ்டிரா

159. இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரைப்படி, உள்நாட்டு வங்கிகள் தங்களுடைய மொத்த டெபாசிட்டில் ........................ சதவீதம் முன்னுரிமை துறைக்கு அளிக்க வேண்டும்.
A ) 32 B) 40
C) 10 D) 25

160. எந்த வருடம் சென்னை சுதேசிச் சங்கம் தொடங்கப்பட்டது ?
A ) 1852 B) 1884
C) 1885 D) 1887

161. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி
கூற்று (A): குடிமையியல் நிர்வாகத்திற்கும், இராணுவத்திற்கும் அதிகமாக செலவு செய்வது வரவேற்கத்தக்கது அல்ல.
கூற்று (R): இந்த இரு துறைகளும் நாட்டின் நிலையான வருமான வளர்ச்சி ஈட்டு சொத்துக்களாக உருவாவதில்லை
A ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
C) (A) மற்றும் (R) இரண்டுமே தவறு D) (A) சரி மற்றும் (R) தவறு

162. மூன்று நபர் ஒரு வட்ட வடிவ அரங்கத்தை ஒரே இடத்திலிருந்து ஒரே நேரத்தில் ஒரே திசையில் நடக்க ஆரம்பிக்கிறார்கள். முதலாமவர் ஒரு முழுச்சுற்றை 120 வினாடிகளிலும், இரண்டாமவர் 150 வினாடிகளிலும், மூன்றாமவர் 80 வினாடிகளிலும் நிறைவு செய்கின்றனர். அப்படியானால் மூன்று பேரும் எவ்வளவு நேரம் கழித்து ஆரம்பித்த இடத்தில் சந்தித்துக் கொள்வார்கள் ?
A ) 20 நிமிடங்கள் B) 2 நிமிடம் 20 வினாடிகள்
C) 2 நிமிடம் 30 வினாடிகள் D) 1 நிமிடம் 40 வினாடிகள்

163. உலகத் தமிழ் செம்மொழி மாநாடு எந்த நகரில் நடைபெற உள்ளது ?
A ) சென்னை B) திருச்சிராப்பள்ளி
C) வேலூர் D) கோயம்புத்தூர்

164. தமிழ்நாட்டில், அதிக காடுகளைக் கொண்ட மாவட்டம் எது ?
A ) மதுரை B) கன்னியாகுமரி
C) சேலம் D) நீலகிரி

165. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி
கூற்று (A): பொதுமக்கள் வேதகாலத்தில் அரசியலில் கலந்து கொண்டனர்.
கூற்று (R): ஏனென்றால் சபா, சமிதியில் அவர்கள் பொது விவகாரங்களை விவாதித்தனர்.

A ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டுமே தவறு
C) (A) சரி ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

166. ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு எந்த விதி சிறப்பு அந்தஸ்தை அளித்துள்ளது ?
A ) விதி 350
B) விதி 356
C) விதி 370
D) விதி 352

167 கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி
கூற்று (A): திடீரென நகரும் புவி ஒட்டினால் அல்லது புவியதிர்வினால் சுனாமி உருவாகிறது.
கூற்று (R): சிஸ்மிக் (புவியதிர்வு) கடலலைகள் ஒத்த அலைகள் என தவறுதலாக அழைக்கப்படுகிறது.

A ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல
C) (A) சரி ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

168. தமிழ்நாட்டில் 2009இல் கலைக்கான பத்மபூஷன் விருதை பெற்றவர்
A ) சித்ரா விஸ்வேஸ்வரன்
B) ஏ.ஆர். ரஹ்மான்
C) ஒய்.ஜி. பார்த்தசாரதி
D) ஸ்ரீ.வி.பி. தனன்ஜெயன் மற்றும் ஸ்ரீமதி சாந்தா தனன் ஜெயன்

169 பத்ருத்தீன் தியாப்ஜி தலைமை தாங்கியது
A ) 1885ல் பம்பாயில் நடந்த முதல் காங்கிரஸ் மாநாட்டில்
B) 1886ல் கல்கத்தாவில் நடந்த இரண்டாவது காங்கிரஸ் மாநாட்டில்
C) 1887ல் சென்னையில் நடந்த மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டில்
D) இவற்றுள் எதுவுமில்லை

170 கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றை பொருத்துக:

| | வகைகள் | % பரப்பு (இந்தியா) |
|---|---|---|
| I. | மலைகள் | 10.6 |
| II. | பீடபூமிகள் | 27.7 |
| III. | சமவெளிகள் | 43.2 |
| IV. | குன்றுகள் | 18.5 |

இவற்றில்:
A) I மற்றும் சரியானது
B) I மற்றும் II சரியானவை

C) I, II மற்றும் III சரியானவை D) அனைத்தும் சரியானவை

171 இவற்றில் எது சரியாகப் பொருந்தியுள்ளது ?
A ) நெபந்தஸ் –– பாறைத்தாவராம் B) டிராசரா –– கொம்புத் தாவரம்
C) யூட்ரிகுலேரியா –– ஜாடி தாவரம் D) டையோனியா – வீனஸ் ஈப்பொறித்தாவரம்

172 நகர்ப்புற உள்ளாட்சி அரசிற்கு அரசியலமைப்பு அங்கீகாரம் கிடைத்தது
A ) 73–வது அரசியலமைப்பு திருத்தம், 11வது அட்டவணை 1992
B) 74–வது அரசியலமைப்பு திருத்தம், 12வது அட்டவணை 1992
C) 73–வது அரசியலமைப்பு திருத்தம், 11வது அட்டவணை 1993
D) 74–வது அரசியலமைப்பு திருத்தம், 12வது அட்டவணை 1993

173. வங்காளப் பிரிவினைக்கு முக்கிய காரணமாக இருந்தவர் யார் ?
A ) வெல்லெஸ்லி B) ரிப்பன்
C) கர்ஸன் D) செம்ஸ்ஃபோர்டு

174 கீழ்காண்பவற்றை கருத்தில் கொள்க:
கூற்றுகள் : சில கார்கள்
எந்த பைக்கும் புகைவண்டி இல்லை

எடுத்த முடிவுகள் : I. எந்த காரும் புகைவண்டி இல்லை
II. எந்த பைக்கும் கார் இல்லை
III. சில கார்கள் புகை வண்டிகள்
IV. சில பைக்குகள் கார்கள்

எடுத்த முடிவுகளில் சரியானவை எது/எவை ? இவற்றுள்
A ) I மற்றும் III சரியானவை B) IV மட்டும் சரியானது
C) அனைத்தும் சரியானவை D) I, II மற்றும் IV சரியானவை

175 பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் I (நூல்கள்) | பட்டியல் II (ஆசிரியர்கள்) |
|---|---|
| a) மணிமேகலை | 1) உருத்திரங் கண்ணனார் |
| b) பட்டினப்பாலை | 2) ஜெயம் கொண்டார் |
| c) சீவகசிந்தாமணி | 3) சீத்தலைச்சாத்தனார் |
| d) மூவருலா | 4) திருத்தக்க தேவர் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 1 | 4 | 2 | 3 |

176. 'செல்வச் சுரண்டல் கோட்பாட்டை' தந்தவர்
A ) இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்களால்
B) தாதாபாய் நௌரோஜி
C) வீரா ஆன்ஸ்டி
D) வி.வி. பட்

177 சென்னை மாகாணம் தமிழ்நாடு என்று மறுபெயரிடப்பட்ட வருடம்
A ) 1966
B) 1969
C) 1967
D) 1968

178 பின்வருவனவற்றுள் கருப்பு நிற மண் அதிகமாக காணப்படும் பிரதேசம்
A ) கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருநெல்வேலி
B) சேலம், தர்மபுரி, நீலகிரி
C) புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மற்றும் காவிரி டெல்டா.
D) காவிரி டெல்டா, பாலாறு நீர்பிடிப்பு பகுதி மற்றும் பாண்டிச்சேரி

179 எறும்பு வகைகள் தங்கள் உணவினை எந்த ஒரு முறையால் கண்டுபிடிக்கின்றன ?
A ) கெமிக்கல் முறையினால்
B) ஆடியோ முறையினால்
C) விஷுவல் முறையினால்
D) ஆல்பேக்டோ முறையினால்

180 கடந்த உள்ளாட்சித் தேர்தலின் போது தமிழ்நாட்டின் மொத்த மாநகராட்சிகளின் எண்ணிக்கை ?
A ) 4
B) 5
C) 6
D) 7

181 நாதீர் ஷா ஓர்
A ) ஆப்கானிய அரசர்
B) மொகலாய அரசர்
C) பாரசீக அரசர்
D) டில்லி சுல்தான்

182. ஒரு வட்டத்தின் பரப்பு 220 சதுர செ.மீ. எனில் அதனுள் வரையப்படும் மிகப்பெரிய சதுரத்தின் பரப்பு என்ன ?
A ) 49 செ.மீ.$^2$
B) 70 செ.மீ.$^2$

C) 140 செ.மீ.$^2$ D) 150 செ.மீ.$^2$

183. திருவிடையாட்டம் என்றால்
A ) மடத்தின் வசம் இருக்கும் நிலம் B) கோயில் வசம் இருக்கும் நிலம்
C) போர்வீரர் வசம் இருக்கும் நிலம் D) பிராமணர் வசம் இருக்கும் நிலம்

184. எந்த சட்டம் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்தது ?
A ) இந்திய அரசுச்சட்டம் 1935 B) சுதந்திர சட்டம் 1947
C) மிண்டோ மார்லி சட்டம் D) மாண்டேகு–செம்ஸ்ஃபோர்டு சட்டம்

185 கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி
கூற்று (A): 1761 ஆம் ஆண்டு முன்றாம் பானிபட் போரில் மராத்தியர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.
கூற்று (R): அதனால் மராத்தியர் வளர்ச்சி தடைப்பட்டதேயொழிய, அவர்கள் அழிக்கப்படவில்லை.
கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியனா விடையைத் தேர்ந்தெடு.
A ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது சரியான விளக்கமல்ல
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது சரியான விளக்கம்
C) (A) சரி ஆனால் (R) தவறு D) (A) தவறு, ஆனால் (R) சரி

186. அடையாறில் இருந்த மெண்ஞான சபை எதிர்கொண்ட பிரச்சனைகள்
I. சமூகப் பிரச்சனைகள்
II. சாதிப் பிரச்சனைகள்
III. அரசியல் பிரச்சனைகள்
IV. சமயப் பிரச்சனைகள்
இவற்றுள்:
A ) I மட்டும் சரியானது B) I மற்றும் II சரியானவை
C) I, II மற்றும் III சரியானவை D) அனைத்தும் சரியானவை

187. ஃபிஃபா (FIFA) உலகக்கோப்பை கால்பந்து 2010இல் எங்கு நடைபெற இருக்கிறது ?
A ) பிரான்சு B) தென்னாப்பிரிக்கா
C) கனடா D) ஜெர்மனி

188. பிப்ரவரி 2010ல் குளிர்கால ஒலிம்பிக்ஸ் விளையாட்டு நடைபெற்ற இடம்
A ) கனடா B) அமெரிக்கா
C) இந்தியா D) இங்கிலாந்து

189. அன்னிபெசன்ட் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராக எந்த ஆண்டு இருந்தார் ?
A ) 1915 B) 1916
C) 1917 D) 1918

**190.** பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) நியோஜோயிக் காலம் | 1) முதல் நிலை |
| b) செனோசிக் காலம் | 2) இரண்டாம் நிலை |
| c) மிசோஜோயிக் காலம் | 3) கால்நிலை |
| d) பேலியோஜோயிக் காலம் | 4) மூன்றாம் நிலை |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 2 | 4 | 3 |

**191.** 2009 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை வென்றவர் யார் ?
A ) பாரக் ஒபாமா
B) நெல்சன் மண்டேலா
C) ஜார்ஜ் புஷ்
D) பில் கிளிண்டன்

**192.** ஒளிவிலகல் எண் 1.46 கொண்ட ஒரு திரவம் கண்ணாடிப் பெட்டகடத்தில் ($\mu$ = 1.65) நிரப்பப்பட்டுள்ளது. ஒளி செங்குத்தாக அதன் மேற்பரப்பின் மீது படும்போது பெட்டகத்தின் வழியே ஊடுருவிச் செல்லும் ஒளி அளவானது.
A ) 18%
B) 36%
C) 44%
D) 100%

**193.** இந்தியாவில் போட்டிக் குழு செயல்பட்டு வரும் நாள்
A ) மார்ச், 2009
B) ஏப்ரல், 2009
C) மே, 2009
D) ஜீன், 2009

**194.** $\log_a (ab) = x$ எனில் $\log_b (ab)$ இன் மதிப்பு
A ) 1/x
B) x / x+1
C) x / 1 – x
D) x / x - 1

**195** இயற்பியலில், எந்தக் கண்டுபிடிப்பிற்காக 2009ம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டது ?

A ) ஆப்டிக்கல்ஃபைபர் வழி தகவல் பரிமாற்றம் மற்றும் சார்ஜ் கப்பிள்டு டிவைஸ்
B) நியூட்ரினோவும் அதன் கண்டுபிடிப்பு வழி முறையும்
C) டிஜிட்டல் இமேஜிங்
D) ரிபோஸோம் அடிப்படை கட்டமைப்பு

196. 'உலகப் புவிநாள்' அனுசரிக்கப்படும் நாள்
A ) ஏப்ரல் 30
B) ஏப்ரல் 22
C) மார்ச் 22
D) ஜீன் 5

197. மத்திய அரசு பட்ஜெட் 2009–2010 ஐ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவர் யார் ?
A ) சிதம்பரம்
B) பிராணாப் முகர்ஜி
C) மன்மோகன்சிங்
D) அர்ஜுன் சிங்

198. பின்குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் நீதிக்கட்சியை சேராதவர் யார் ?
A ) பிட்டி தியாகராய செட்டி
B) பனகல் ராஜா
C) டி.எம். நாயர்
D) இராஜகோபாலாச்சாரியார்

199. 1995ஆம் ஆண்டு நேரு பரிசை வென்றவர்
A ) ஜுலியஸ் நாம்ராய்
B) அருணா ஆசாப் அலி
C) டாக்டர் புருனோ கிவேய்ஸ்கி
D) முகமது கோஸ்னி முபாரக்

200. பராக் ஹுசைன் ஒபாமா அமெரிக்காவின் 44–வது அதிபராகப் பதவியேற்ற ஆண்டு
A ) 2007
B) 2008
C) 2010
D) 2009.